# பதிவு மற்றும் புதுப்பிப்புக்கான வரி செலுத்துவோர் வழிகாட்டுதல்கள்


வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றுக்கொள்ளல்....................................2

தனிநபர் அடையாள இலக்கம் (PIN) மற்றும் விசேட பணியாளர் அடையாள இலக்கத்தைப் (SSID) பெற்றுக் கொள்ளல்....................................4

வரி வகையிகளைப் பதிவுசெய்தல்....................................5

தற்காலிக பெறுமதி சேர் வரியினைப் பதிவு செய்தல்....................................6

வரி முகவர்களைப் பதிவுசெய்தல்....................................7

வரிசெலுத்துனர் விபரத்தகவல்களை இற்றைப்படுத்தல்....................................8

வரிவகைத் தகவல்களை இற்றைப்படுத்தல....................................9

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டத்தின் (SVAT) கீழ் பதிவு செய்தல்....................................10

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டத்தின் (SVAT) கீழ் தகவல்களை இற்றைப்படுத்தல்....................................12

திட்ட விபரங்களை இற்றைப்படுத்தல்....................................13


www.ird.gov.lk

# வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றுக்கொள்ளல்

வரி செலுத்துதல் / இறக்குமதி செய்தல் / ஏற்றுமதி செய்தல் அல்லது தொடர்புடைய எந்தவொரு நோக்கத்திற்காகவும், முதன்மைப் பதிவினூடாக வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை (TIN) பெறுவது அவசியமாகும். மேலும் வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை (TIN) பெற்ற பின்னர், விண்ணப்பதாரியின் தேவைகள் மற்றும் பொறுப்புக்களின் அடிப்படையில் பொருத்தமான பதிவுகள் (வரி வகை போன்றவை) செய்யப்பட வேண்டும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை (IRD e-services) பயன்படுத்துவதன் மூலம் வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவான வழிகாட்டுதல்களுக்கு வரி செலுத்துவோராக எவ்வாறு பதிவு செய்வது ('How to register as a Taxpayer') எனும் விரிவான துரித வழிகாட்டியைப் பார்க்கவும்.

**வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆவணங்கள்**

**தனிநபர்களுக்கானது**

- தேசிய அடையாள அட்டை (இலங்கையருக்காக) அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவருக்காக)
- வியாபார பதிவுச் சான்றிதழ் (TIN இல் உரிமையாளர் என சேர்க்கவேண்டுமெனில்)
- செலவீனப் பட்டியல் / நிலையான தொலைபேசிப் பட்டியல் / வங்கிக்கணக்கு அறிக்கை அல்லது வங்கிக் கணக்கு புத்தகம் / கிராம சேவையாளரின் சான்றிதழ் (தேசிய அடையாள அட்டையிலிருந்து முகவரி வேறுபட்டிருந்தால்). வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணம்.

**பங்குடமைக்கானது**

- பங்குடமை பதிவுச் சான்றிதழ்
- பங்காளர்களது தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)

**கம்பனியைப் பதிவு செய்வதற்கானது (தனியார் கம்பனி, உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி, வெளிநாட்டுக் கம்பனி, வரையறுக்கப்பட்ட கம்பனி, வரையறுக்கப்படாத கம்பனி, கடல் கடந்த கம்பனி)**

- கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் (படிவம் 2A/2D/42/41 )
- கம்பனிப் பதிவாளரால் சான்றழிக்கப்பட்ட நிறுவன பதிவிற்கான விண்ணப்பம் (படிவம் 01/05/40)
- அனைத்து இயக்குனர்களதும் தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)
- கம்பனிப் பதிவாளரால் சான்றழிக்கப்பட்ட இயக்குனர்கள் / செயலாளரை மாற்றுவதற்கான அனைத்து அறிவிப்புக்களுடம் (படிவம் 20)
- கம்பனிப் பதிவாளரால் சான்றழிக்கப்பட்ட முகவரி மாற்றுவதற்கான அறிவிப்பு (படிவம் 13/35)
- ஒப்புதல் மற்றும் இயக்குனர் கடிதம் (படிவம் 18 - இயக்குனர்களின் கையொப்பத்தை அங்கீகரிக்க படிவம் 20 பெறப்பட்டால் மட்டுமே பொருந்தும்)
- அமைப்பு அக விதி
- முதலீட்டுச் சபையால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் அல்லது பொருத்தமான உடன்படிக்கைகள்

**ஏனையவை (திட்டங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள், அலகு நம்பிக்கை நிதியம், தொண்டு நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள், அறக்கட்டளைகள், கிளப்புக்கள் மற்றும் சங்கங்கள், அரசு மற்றும் அரை அரசு நிறுவனங்கள், தூதரகங்கள் மற்றும் உயர் ஆணையாளர் பணியகம், வருங்கால வைப்பு நிதி, ஏனைய வெளிநாட்டு கம்பனிகள்-இலங்கையில் பதிவு செய்யப்படாதவை, மத தானங்கள் போன்றவை)**

- நிறுவனத் தலைவரின் கோரிக்கைக் கடிதம்
- தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்) மற்றும் கையொப்பமிட்டவரின் நியமனம் / உறுதிப்படுத்தல் கடிதம்
- ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கை / நிறைவேற்றுதரப்பினரது அறிக்கை (பொருத்தமெனில்)
- பதிவுச் சான்றிதழ்
- தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட கிளையின் உறுதிப்படுத்தல் (கிளைகளுக்கு மட்டும்)

**For further details call IRD Call Centre on 1944**

www.ird.gov.lk

- நிதி நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டம் / வர்த்தமானி (அரசு மற்றும் அரை அரசு நிறுவனங்களுக்கு மட்டும்)
- கூட்டு முயற்சிகளது ஒப்பந்தம் மற்றும் பங்காளர்களுது வரி செலுத்துனர் அடையாள இலக்கச் சான்றிதழ் (கூட்டு முயற்சிகளுக்கு மட்டுமானது)
- கையொப்பமிட்டவருக்கான அதிகாரக் கடிதம் (ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படா விட்டால் மட்டுமே கூட்டு முயற்சிகளுக்கானது)
- திட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அமைச்சரவை ஒப்புதல் போன்றவை (திட்டங்களுக்கு மட்டுமானது)
- நம்பிக்கைப் பத்திரம் (அறக்கட்டளைகளுக்கு மட்டுமானது) மற்றும் அறங்காவலர்களின் தேசிய அடையாள அட்டை (இலங்கையருக்காக) அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவருக்காக)

www.ird.gov.lk

# தனிநபர் அடையாள இலக்கம் (PIN) மற்றும் விசேட பணியாளர் அடையாள இலக்கத்தைப் (SSID) பெற்றுக் கொள்ளல்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை பயன்படுத்துவதற்கு தனிநபர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமானது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை பயன்படுத்துவதன் மூலம் தனிநபர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விரிவான வழிகாட்டுதல்களுக்கு இலத்திரனியல் சேவையை பயன்படுத்துவதற்கு தனிநபர் அடையாள இலக்கத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது (‘How to obtain a PIN to use e-Service’) எனும் விரிவான துரித வழிகாட்டியைப் பார்க்கவும்.

PIN உருவாக்கப்பட்டு உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு உடனடியாக அனுப்பப்படும். அஞ்சல் முறையில் பின்னைப் பெறவும் நீங்கள் தேர்வு செய்யலாம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை பயன்படுத்துவதற்கு கம்பனிகள், பங்குடமைகள் மற்றும் வரி முகவர்களுக்கு விசேட பணியாளர் அடையாள இலக்கம் அவசியமானது.

தனிநபர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், அவர்களது ஊழியர்கள் இலத்திரனியல் சேவையில் உள்நுழைவதனை அனுமதிக்கதற்கு இலத்திரனியல் சேவையின் அங்கீகாரம் பெற்ற பணியாளர்கள் வரி முகவர் இணைப்பு வழியாகவே Authorization of Staff/Tax Agent link விசேட பணியாளர் அடையாள இலக்கத்திற்கு கோரிக்கைவிட முடியும்.

விரிவான வழிகாட்டுதல்களுக்கு இலத்திரனியல் சேவையை பயன்படுத்துவதற்கு தங்களின் சார்பில் செயற்படுவதற்கு பதவியினா் அல்லது வரி முகவா்களுக்கு எவ்வாறு அதிகாரமளிப்பது நபர் அடையாள இலக்கத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது (‘How to authorize staff or external tax agents to act on your behalf’) எனும் விரிவான துரித வழிகாட்டியைப் பார்க்கவும்.

SSID உருவாக்கப்பட்டு உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அடுத்த வேலை நாளில் அனுப்பப்படும்.

.

www.ird.gov.lk

# வரி வகையிகளைப் பதிவுசெய்தல்

வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை (TIN) பெற்றுக்கொண்ட பின்னர், யாருக்கு பதிவுசெய்யவேண்டிய பொறுப்பு உள்ளதோ அவர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை (IRD e-services) பயன்படுத்துவதன் மூலம் வரிகளைப் பதிவுசெய்துகொள்ளல் அவசியமானது.

விரிவான வழிகாட்டுதல்களுக்கு வரி வகைகளை எவ்வாறு பதிவு செய்வது ('How to Register for a Tax Type') எனும் விரிவான துரித வழிகாட்டியைப் பார்க்கவும்.

**வரி வகைகளுக்கு பதிவு செய்யக்கூடிய நபர்கள்**

- வரையறைக்கு மேலுள்ள வருமானத்தின் அடிப்படையில் விபரத்திரட்டினை சமர்ப்பிக்க வேண்டியவர்கள் - வருமான வரி
- வரையறைக்கு மேல் அல்லது தன்னார்வ அடிப்படையில் வரி விதி வழங்கலைக் கொண்டுள்ளவர்கள் - பெறுமதி சேர் வரி
- ஏனைய வரி வகைகளுக்கு பதிவு செய்ய பொறுப்புடையவர்கள்

நிறுவனங்களுக்காக வருமான வரியானது (CIT) TINஇனைப் பெற்றுக்கொண்ட பின் தானாகவே பதிவுசெய்யப்படும்.

பெறுமதி சேர் வரிதவிர்த்து ஏனைய வரி வகைகளுக்கு துணை ஆவணங்கள் தேவையில்லை.

பெறுமதி சேர் வரி உட்பட வரிகளுக்கான பதிவினை மேற்கொள்ளும் முன்னர் மின்னஞ்சல் முகவரி மற்றும் கைத்தொலைபேசி உட்பட வரிசெலுத்துனர் விபரத்தகவல்களை தகுந்தவாறு இற்றைப்படுத்துதல் அவசியமானது.

**பெறுமதி சேர் வரிவகையைப் பதிவு செய்துகொள்வதற்கு தேவையான துணை ஆவணங்கள்**

- வணிகத்தின் வரிவிதி வழங்கலை உறுதிப்படுத்தும் ஆவணம் (விற்பனை விலைப்பட்டியல் / கொள்வனவுக் கட்டளைகள் / விற்பனை ஒப்பந்தங்கள் / வங்கி அறிக்கைகள்/வாடகை ஒப்பந்தம் / விமான வழி சீட்டு / கப்பல் ஒப்பந்தச் சீட்டு / வணிக விலைப்பட்டியல் / வங்கி ஒப்புதல் கடிதம்)
- தேயிலை வாரியம், தேங்காய் சாகுபடி வாரியம், மாணிக்கம் மற்றும் நகை ஆணையம் ஆகியவற்றால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்
- தன்னார்வ அடிப்படையில் பதிவு செய்யின், பதிவு செய்வதற்கான நோக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்
- 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 22(7) ஆம் பிரிவு/விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் /மூலோபாய அபிவிருத்தி திட்டத்திற்கு அமைய பதிவுசெய்யின் கீழேயுள்ள (9.2) பகுதியைப் பார்க்கவும்
- பெறுமதி சேர் வரிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பத்தின்படி அங்கீகாரம் பெற்றவரின் தேசிய அடையாள அட்டை பிரதி

www.ird.gov.lk

## தற்காலிக பெறுமதி சேர் வரியினைப் பதிவு செய்தல்

இலங்கை சுங்க வழியாக இறக்குமதி, ஏற்றுமதி, மறு ஏற்றுமதிகளைச் செய்பவர்களுக்கு பெறுமதி சேர் வரியினைப் பதிவுசெய்தல் அவசியமாகும். நிரந்தர பெறுமதி சேர் வரிப் பதிவினைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு தற்காலிக பெறுமதி சேர் வரிப் பதிவு வழங்கப்படுகின்றது.

இப்பதிவினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை (IRD e-services) பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தற்காலிக பெறுமதி சேர் வரிப் பதிவினை மேற்கொள்ளும் முன்னர் மின்னஞ்சல் முகவரி மற்றும் கைத்தொலைபேசி உட்பட வரிசெலுத்துனர் விபரத்தகவல்களை தகுந்தவாறு இற்றைப்படுத்துதல் அவசியமானது.

CGIR/2020/2-2 இலக்கமுடைய 23.11.2020ஆம் திகதியிட்ட சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் வழங்கிய கடிதத்தின்படி, பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்கள் தற்காலிக பதிவினை இனிமேல் மேற்கொள்ளத் தேவையில்லை.

- சுங்கத் தீர்ப்பனவு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்
- கப்பல் முகவர்கள் மற்றும் துணை முகவர்கள்
- தீர்ப்பனவு முகவர்கள் மற்றும் வார்.்.ப் பிரதிநிதிகள்
- இலங்கை முதலீட்டு சபையில் பதிவுசெய்யப்பட்டு இறக்குமதி ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள்
- களஞ்சியசாலைகளை இயக்குபவர்கள்
- கூரியர் முகவர்கள்

**தேவையான ஆவணங்கள்**

- இறக்குமதிக்காக: கப்பல் ஒப்பந்தச் சீட்டு / விமான வழி சீட்டு
- ஏற்றுமதிக்காக: கொள்வனவுக் கட்டளை / கொள்வனவு ஒப்பந்தம்

www.ird.gov.lk

## வரி முகவர்களைப் பதிவுசெய்தல்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொண்ட தனிநபர்கள் மற்றும் பங்குடமைகள், மேலும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள தேவைகளில் ஒன்றைக் கொண்டுள்ள நபர்கள் வரி முகவர்களாக விண்ணப்பிக்க முடியும். கம்பனி உழைக்கும்போது செலுத்தும் வரிக்கு (PAYE) மட்டுமே பொறுப்பாகவும் வரி முகவராகவும் செயற்பட முடியும்.

- ஒரு சட்ட வழக்கறிஞர்
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர்
- இலங்கை வரிவிதிப்பு நிறுவனத்தின் அங்கத்தவர்
- உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் அனுமதிக்கப்பட்டதும் கம்பனி (கணக்காய்வாரள்கள்) விதிமுறைகளுக்கு அமைய கணக்காய்வாளராக பதிவுசெய்யப்பட்ட தனிநபர்
- 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விதிமுறைகளின்படி உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட தனிநபர்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை பயன்படுத்துவதன் மூலம் வரி முகவர்களாக பதிவு செய்துகொள்ள முடியும். விரிவான வழிகாட்டுதல்களுக்கு வரி முகவராக எவ்வாறு பதிவு செய்வது ('How to register as a tax agent') எனும் விரிவான துரித வழிகாட்டியைப் பார்க்கவும்.

**வரி முகவர்களாக பதிவு செய்வதற்கு தேவையான துணை ஆவணங்கள்**

- விண்ணப்பதாரியினது தேசிய அடையாள அட்டை (இலங்கையருக்காக) அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவருக்காக)
- 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 212 மற்றும் 217ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட 2006ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒழுங்குவிதிகளின் படி வரி முகவராக செய்படுவதற்குரிய தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம்.

www.ird.gov.lk

## வரிசெலுத்துனர் விபரத்தகவல்களை இற்றைப்படுத்தல்

வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் பெற்றதன் பின்னர் வரிசெலுத்துனர் விபரத்தகவல்களை தகுந்தவாறு இற்றைப்படுத்தல அவசியமாகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை (IRD e-services) பயன்படுத்துவதன் மூலம் வரி செலுத்துனர் விபரத்தகவல்களை இற்றைப்படுத்தலாம். விரிவான வழிகாட்டுதல்களுக்கு வரி செலுத்துனர் விபரம் தொடர்பான தகவல்களை எவ்வாறு மாற்றுவது 'How to change Taxpayer Profile Information' எனும் விரிவான துரித வழிகாட்டியைப் பார்க்கவும்.

**வரிசெலுத்துனர் விபரத்தகவல்களை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள்**

**தனிநபர்களுக்கானது**

- தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)
- வியாபார பதிவுச் சான்றிதழ் (TINஇல் உரிமையாளர் என சேர்க்கவேண்டுமெனில்)
- செலவீனப் பட்டியல் / வங்கிக்கணக்கு அறிக்கை அல்லது வங்கிக் கணக்கு புத்தகம் / கிராம சேவையாளரின் சான்றிதழ் (தேசிய அடையாள அட்டையிலிருந்து முகவரி வேறுபட்டிருந்தால்)

**பங்குடமைக்கானது**

- பங்குடமை பதிவுச் சான்றிதழ்
- பங்காளர்களது தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)
- முகவரியினை உறுதிப்படுத்துவதற்காக குத்தகை ஒப்பந்தம் / உறுதி

**கம்பனியைப் பதிவு செய்வதற்கானது (தனியார் கம்பனி, உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி, வெளிநாட்டுக் கம்பனி, வரையறுக்கப்பட்ட கம்பனி, வரையறுக்கப்படாத கம்பனி, கடல் கடந்த கம்பனி)**

- கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் (படிவம் 2A/2D/41/42)
- கம்பனிப் பதிவாளரால் சான்றழிக்கப்பட்ட விண்ணப்ப படிவம் 01/20
- அனைத்து இயக்குனர்களதும் தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)
- வியாபாரத்தின் பெயரை மாற்றுவமதாயின் படிவம் 04
- முகவரியினை மாற்றுவமதாயின் கம்பனிப் பதிவாளரால் சான்றழிக்கப்பட்ட படிவம் 13/35 மற்றும் குத்தகை ஒப்பந்தம் / உறுதி

**ஏனையவை (திட்டங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள், அலகு நம்பிக்கை நிதியம், தொண்டு நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள், அறக்கட்டளைகள், கிளப்புக்கள் மற்றும் சங்கங்கள், அரசு மற்றும் அரை அரசு நிறுவனங்கள், தூதரகங்கள் மற்றும் உயர் ஆணையாளர் பணியகம், வருங்கால வைப்பு நிதி, ஏனைய வெளிநாட்டு கம்பனிகள்- இலங்கையில் பதிவு செய்யப்படாதவை, மத தானங்கள் போன்றவை)**

- நிறுவனத் தலைவரின் கோரிக்கைக் கடிதம்
- தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்) மற்றும் கையொப்பமிட்டவரின் நியமனம் / உறுதிப்படுத்தல் கடிதம்
- ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கை / நிறைவேற்றுதரப்பினரது அறிக்கை (பொருத்தமெனில்)
- பதிவுச் சான்றிதழ்
- தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட கிளையின் உறுதிப்படுத்தல் (கிளைகளுக்கு மட்டும்)
- நிதி நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டம் / வர்த்தமானி (அரசு மற்றும் அரை அரசு நிறுவனங்களுக்கு மட்டும்)
- கூட்டு முயற்சிகளது ஒப்பந்தம் மற்றும் பங்காளர்களது வரி செலுத்துனர் அடையாள இலக்க(வுஜே) சான்றிதழ் (கூட்டு முயற்சிகளுக்கு மட்டுமானது)
- கையொப்பமிட்டவருக்கான அதிகாரக் கடிதம் (ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பபடா விட்டால் மட்டுமே கூட்டு முயற்சிகளுக்கானது)
- திட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அமைச்சரவை ஒப்புதல் போன்றவை (திட்டங்களுக்கு மட்டுமானது)
- நம்பிக்கைப் பத்திரம் (அறக்கட்டளைகளுக்கு மட்டுமானது)
- முகவரியினை உறுதிப்படுத்துவதற்காக குத்தகை ஒப்பந்தம் / உறுதி

www.ird.gov.lk

**For further details call IRD Call Centre on 1944**

# வரிவகைத் தகவல்களை இற்றைப்படுத்தல

**(வருமான வரி / பெறுமதி சேர் வரி / நிறுத்திவைத்தல் வரி)**

வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தைப் பெற்று வரிவகைகளுக்கான பதிவுகளை மேற்கொண்டதன் பின்னா் வரிவகைத் தகவல்களை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவையை (IRD e-services) பயன்படுத்துவதன் மூலம தகுந்தவாறு இற்றைப்படுத்தலாம்.

விரிவான வழிகாட்டுதல்களுக்கு வரிவகை விபரம் தொடா்பான தகவல்களை எவ்வாறு மாற்றுவது (‘How to change Tax Type Detail Information’) எனும் விரிவான துரித வழிகாட்டியைப் பார்க்கவும்.

வரிவகைத் தகவல்களை இற்றைப்படுத்தும் போது உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் கைத்தொலைபேசி எண் இரண்டையும் சரியாக வழங்குவது மிகவும் அவசியமானது.

**வரிவகைகளை மீளச் செயற்படுத்தல்:** செயலிழந்த நிலையிலுள்ள வரிவகைகளை பொறுப்பிற்கேற்ப மீளச் செயற்படுத்துதல் அவசியம்.

**வரிவகைகளை மீளச் செயற்படுத்தத் தேவையான ஆவணங்கள்**

- பெறுமதி சேர் வரி தவிர வரி வகைகளை செயற்படுத்துவதற்குத் தேவையான பொறுப்பினை உறுதிப்படுத்திய கோரிக்கைக் கடிதம்
- பெறுமதி சேர் வரியினை செயற்படுத்துவதற்கான கோரிக்கைக் கடிதம் மற்றும் வரி விதி வழங்கலை உறுதிப்படுத்ததும் ஆவணங்கள்
- (விற்பனை விலைப்பட்டியல் / கொள்வனவுக் கட்டளைகள் / விற்பனை ஒப்பந்தங்கள் / வங்கி அறிக்கைகள் / வாடகை ஒப்பந்தம் / விமான வழி சீட்டு / கப்பல் ஒப்பந்தச் சீட்டு / வங்கி புறக்குறிப்பிடுதலுடன் வணிக விலைப்பட்டியல் / வங்கி ஒப்புதல் கடிதம் /தேயிலைச் சபை / தென்னை பயிர்ச் செய்கைச் சபை / தேசிய மாணிக்கம் மற்றும் நகை ஆணையம் போன்றவைகளினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்)

**வரி வகையினை செயலிழக்கச் செய்தல்:** வரி வகை தற்போது செயற்படும் நிலையில் இருந்தால், அதன் பொறுப்புக் குறைவு காரணமாக செயலிழக்கச் செய்ய வேண்டும். வரி வகைகளை செயலிழக்கச் செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் வழங்கப்பட்ட /நிலுவையிலுள்ள விபரத்திரட்டுக்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**வரி வகையினை செயலிழக்கச் செய்வதற்குத் தேவையான துணை ஆவணங்கள்**

- செயலிழக்கச் செய்வதற்கான காரணத்தைக் கூறும் கோரிக்கைக் கடிதம் மற்றும் அதற்கான பொறுப்பின்மையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
- தனிநபர் பங்காளர் இயக்குனர்களது வணிக நடவடிக்கைகள் மூடப்படுவதை உறுதிப்படுத்தும் வாக்குமூல உறுதிமொழி
- சம்பந்தப்பட்ட அதிகாரசபையினால் (கம்பனிப் பதிவாளர் /உள்ளூராட்சி சபை) வழங்கப்பட்ட வியாபாரப் பதிவை இரத்து செய்ததற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம்
- கடந்த 12 மாத வங்கி அறிக்கைகள்

www.ird.gov.lk

**For further details call IRD Call Centre on 1944**

# இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டத்தின் (SVAT) கீழ் பதிவு செய்தல்

ஏற்கனவே பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்தவர்களுக்கு பின்வரும் பிரிவுகளின் கீழ் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிக்கு (SVAT) பதிவு செய்யப்படுகிறது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் வரி பதிவு செய்தல் பிரிவுக்கு (2வது மாடி) வருகை தருவதன் மூலம் அல்லது பொருத்தமான விண்ணப்பத்தையும் ஆவணங்களையும் ஒரே PDF கோப்பில் tr@ird.gov.lk ற்கு மின்னஞ்சல் செய்வதன் மூலம் SVAT இற்கு பதிவு செய்யலாம்.

1. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர் (RIS)
2. பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்கள் (RIP)
    - 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 22(7) ஆம் பிரிவுக்கு அமைய
    - 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி ஐஐ இன் பந்தி ஊ(ஐஐ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்கு அமைய
    - 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்தி திட்டச் சட்டத்தின் மூலோபாய அபிவிருத்தி திட்ட பிரிவு 3(4)இற்கு அமைய
    - பூச்சிய வரி வீத வழங்குனர்கள் (ஏற்றுமதியாளர்கள்)
    - ஏற்றுமதியாளர்களுக்கான வழங்குனர்கள்.
    - மேலே ஒன்று.ஃ.மேற்பட்டவர்களுக்கு வழங்குனர்கள்

SVAT தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 27.09.2016 ஆம் திகதியிடப்பட் 1986/9ஆம் இலக்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**SVAT பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள்**

**பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களுக்கானது (RIS)**

- SVAT புதிய / திருத்தப் பதிவிற்கான விண்ணப்பம் **TPR_006_T**
- SVATற்கு விண்ணப்பிப்பதற்காக இயக்குனர் / பங்காளருக்கு அதிகாரம் வழங்கும் சபைத் தீர்மானம் (கம்பனி) / ஆட்சேபனைக்கடிதம் (பங்குடமை)
- பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களின் (RIP) பட்டியல் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள்
- பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட ஒரு கொள்வனவாளரின் (RIP) இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிக் (SVAT) கொள்ளவனவுக் கட்டளை

**பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளர்களுக்கானது (RIP)**

- SVAT புதிய / திருத்தப் பதிவிற்கான விண்ணப்பம் **TPR_006_T**
- தனிநபர் / பங்காளர் / இயக்குனரின் கோரிக்கைக் கடிதம்
- SVATற்கு விண்ணப்பிப்பதற்காக இயக்குனர் / பங்காளருக்கு அதிகாரம் வழங்கும் சபைத் தீர்மானம் (கம்பனி) / ஆட்சேபனைக்கடிதம் (பங்குடமை)
- பின்னிணைப்பு - இ (அதிகாரமளிக்கப்பட்ட வரவு வவுச்சர் கையொப்ப விபரங்களை சேர்த்தல் / நீக்குதல் / இற்றைப்படுத்தல் **TPR_015_T**
- விண்ணப்பத்தில் கையொப்பமிட்ட இயக்குனர் / பங்காளர் / தனிநபர்களினால் சான்றுப்படுத்தப்பட்ட, கடன் வவுச்சர்களில் கையொப்பமிட அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் கையொப்பங்கள்
- கடன் வவுச்சர்களில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)
- கடன் வவுச்சர்களை பெற்றுக்கொள்வதற்காக அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)
- ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை / தேயிலைச் சபை / தென்னை பயிர்ச்செய்கைச் சபை / தேசிய மாணிக்கம் மற்றும் நகை ஆணையம் போன்றவைகளினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்
- பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனர்களின் (RIS) பட்டியல் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள்
- கொள்ளவனவுக் கட்டளை மற்றும் விலைப்பட்டியல் மற்றும் வங்கி அறிக்கைகள்

**For further details call IRD Call Centre on 1944**

www.ird.gov.lk

**RIP பிரிவின் கீழ் மேலே குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக, 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 22(7) ஆம் பிரிவின் கீழ்**

- 22(7)ம் பிரிவுக்கான / விசேட கருத்திட்டத்திற்கான / உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திடங்களுக்கான இற்றைப்படுத்தல் விண்ணப்படிவம் **TPR_007_T**
- முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் (பொருத்தமெனில்)
- முதலீட்டுச் சபையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் (பொருத்தமெனில்)
- திட்டத்ரின் பெறுமதி, வகை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வழங்கலின் பெறுமதி, திட்டத்தின் வியாபார ஆரம்பத் திகதி, மானிய விளக்கப்பட்ம் போன்றவை உள்ளடங்கலாக திட்ட முன்மொழிவு
- நிதி மூலங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
- வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பது தொடர்பான அறிக்கை
- உத்தேச கொள்வனவுப் பட்டியல் (முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு முதலீட்டுச் சபையால் ஒப்புதல் அளிக்கப்படல் வேண்டும்)
- சொத்துப்பத்திரம் / குத்தகை ஒப்பந்தம்
- உள்;ர் அரசாங்க அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்டு முதலீட்டுச் சபையால் சான்றுப்படுத்தப்பட்ட நில அளவைப் படம்
- திட்டப் பரப்பை காட்டும் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட படம் மற்றும் ஓவியம்
- பட்டய பொறியியலாளரால் சான்றுப்படுத்தப்பட்ட அளவு மசோதா (BoQ)
- சுற்றுலா திணைக்களத்தால் வழங்கப்பட் அனுமதி (Hotels களுக்கு மட்டும்)
- சம்பந்தப்பட்ட அரச திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றுச் சுழல் அனுமதி
- ஒப்பந்த உடன்படிக்கை (பொருத்தமெனில்)

**RIP பிரிவின் கீழ் மேலே குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக, விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தின் கீழ்**

- 22(7)ம் பிரிவுக்கான / விசேட கருத்திட்டத்திற்கான / உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திடங்களுக்கான இற்றைப்படுத்தல் விண்ணப்படிவம் **TPR_007_T**
- சம்பந்தப்பட்ட அமைச்சின் ஒப்புதல் / சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் கையொப்பமிட்ட கடிதம்
- செயலகக் கிளையிலிருந்து பெற்றுக்கொண்ட பதிவுக்கடிதம்

**RIP பிரிவின் கீழ் மேலே குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக, மூலோபாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ்**

- 22(7)ம் பிரிவுக்கான / விசேட கருத்திட்டத்திற்கான / உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திடங்களுக்கான இற்றைப்படுத்தல் விண்ணப்படிவம் **TPR_007_T**
- வர்த்தமானி அறிவித்தல் / சம்பந்தப்பட்ட அமைச்சின் ஒப்புதல் / சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் கையொப்பமிட்ட கடிதம்
- செயலகக் கிளையிலிருந்து பெற்றுக்கொண்ட பதிவுக்கடிதம்

www.ird.gov.lk

## இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டத்தின் (SVAT) கீழ் தகவல்களை இற்றைப்படுத்தல்

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டத்தின் (SVAT) கீழ் தகவல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் வாடிக்கையாளர் தகவல் இற்றைப்படுத்தல் பிரிவு (2வது மாடி) வருகைதருவதன் மூலம் அல்லது பொருத்தமான விண்ணப்பத்தையும் ஆவணங்களையும் ஒரே PDF கோப்பில் ci@ird.gov.lkற்கு மின்னஞ்சல் செய்வதன் மூலம் இற்றைப்படுத்தலாம்.
விண்ணப்பப் படிவம் மற்றும் தேவையான ஆவணங்கள் பின்வரும் ஒருவரினால் மாத்திரம் கையொப்பமிடப்படல் வேண்டும்.

- SVATற்கு விண்ணப்பிக்க குழு தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்ட இயக்குனர்
- SVATற்கு விண்ணப்பிக்க ஆட்சேபனையின்றிக் கடிதம் பெற்ற பங்காளர்
- தனிநபர்

மேற்கண்ட இயக்குனர் அல்லது பங்காளரை மாற்ற வேண்டியேற்படின் புதிய குழு தீர்மானம் அல்லது ஆட்சேபனையின்றிக் கடிதம் அவசியம்.

**SVAT தகவல்களை இற்றைப்படுத்தத் தேவையான ஆவணங்கள்**

- மேலே கூறப்பட்ட குழு தீர்மானம் அல்லது ஆட்சேபனையின்றிக் கடிதத்தின் நகல்
- SVAT புதிய / திருத்தப் பதிவிற்கான விண்ணப்பம் **TPR_006_T**
- பின்னிணைப்பு - இ (அதிகாரமளிக்கப்பட்ட வரவு வவுச்சர் கையொப்ப விபரங்களை சேர்த்தல் / நீக்குதல் / இற்றைப்படுத்தல் **TPR_015_T**
- விண்ணப்பத்தில் கையொப்பமிட்ட இயக்குனர் / பங்காளர் / தனிநபர்களினால் சான்றுப்படுத்தப்பட்ட, கடன் வவுச்சர்களில் கையொப்பமிட அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் கையொப்பங்கள்
- கடன் வவுச்சர்களில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)
- கடன் வவுச்சர்களை பெற்றுக்கொள்வதற்காக அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் தேசிய அடையாள அட்டை (இலங்கையர்) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (வெளிநாட்டவர்)

www.ird.gov.lk

# திட்ட விபரங்களை இற்றைப்படுத்தல

கீழே குறிப்படப்பட்டுள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட திட்டங்களின் விபரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் வாடிக்கையாளர் தகவல் இற்றைப்படுத்தல் பிரிவு (2வது மாடி) வருகைதருவதன் மூலம் அல்லது பொருத்தமான விண்ணப்பத்தையும் ஆவணங்களையும் ஒரே PDF கோப்பில் ci@ird.gov.lkற்கு மின்னஞ்சல் செய்வதன் மூலம் இற்றைப்படுத்தலாம்.

- 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 22(7) ஆம் பிரிவுக்கு அமைய
- 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி ஐஐ இன் பந்தி ஊ(ஐஐ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்கு அமைய
- 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்தி திட்டச் சட்டத்தின் மூலோபாய அபிவிருத்தி திட்ட பிரிவு 3(4)இற்கு அமைய

தற்போதைய நீட்டிப்புத் திகதி முடிவடைய 14 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்தல் அவசியம். மேலும் முன்னைய நீட்டிப்பின் போது ஏதேனும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பின், அவற்றை விண்ணப்பிக்க முன்னர் பூர்த்திசெய்தல் அவசியம். விண்ணப்பப் படிவம் மற்றும் தேவையான ஆவணங்கள் பின்வரும் ஒருவரினால் கையொப்பமிடப்படல் வேண்டும்.

- SVATற்கு விண்ணப்பிக்க குழு தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்ட இயக்குனர்
- SVATற்கு விண்ணப்பிக்க ஆட்சேபனையின்றிக் கடிதம் பெற்ற பங்காளர்
- தனிநபர்

மேற்கண்ட இயக்குனர் அல்லது பங்காளரை மாற்ற வேண்டியேற்படின் புதிய குழு தீர்மானம் அல்லது ஆட்சேபனையின்றிக் கடிதம் அவசியம்.

**திட்ட விபரங்களை இற்றைப்படுத்தத் தேவையான ஆவணங்கள்**

**2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 22(7) ஆம் பிரிவின் கீழ்**

- 22(7)ம் பிரிவுக்கான / விசேட கருத்திட்டத்திற்கான / உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திடங்களுக்கான இற்றைப்படுத்தல் விண்ணப்படிவம் TPR_007_T
- இயக்குனரினால் சான்றளிக்கப்பட்ட புகைப்படங்களுடனான முன்னேற்ற அறிக்கை
- இயக்குனரினால் சான்றளிக்கப்பட்ட முன்னைய நீட்டிப்பிலிருந்தான வங்கி அறிக்கைகள்
- பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பில் ஏற்படும் செலவு அறிக்கை
- பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பில் பொருள் நல்லிணக்கக் கூற்று
- இயக்குனரினால் சான்றளிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் கட்டண விபரம்
- இறக்குமதி / கொள்முதல் / SVAT கொள்வனவுகளுக்கான அட்டவணைகள்
- திருத்தப்பட்ட திட்ட வரைவுகள் / கூடுதல் அளவு மசோதா (BoQ)
- முதலீட்டுச் சபையுடன் மேற்கொள்ளப்பட்ட துணை ஒப்பந்தம்
- முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்ட நீட்டிப்புக் கடிதம்
- முன்னைய நீட்டிப்பின் போது கோரப்பட்ட ஏதேனும் ஆவணங்கள்

**விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தின் கீழ்**

- 22(7)ம் பிரிவுக்கான / விசேட கருத்திட்டத்திற்கான / உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திடங்களுக்கான இற்றைப்படுத்தல் விண்ணப்படிவம் TPR_007_T
- சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் கையொப்பமிட்ட நீட்டிப்புக்கடிதம்
- செயலகக் கிளையிலிருந்து பெற்றுக்கொண்ட நீட்டிப்புக்கடிதம்

**மூலோபாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ்**

- 22(7)ம் பிரிவுக்கான / விசேட கருத்திட்டத்திற்கான / உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திடங்களுக்கான இற்றைப்படுத்தல் விண்ணப்படிவம் TPR_007_T
- வர்த்தமானி அறிவித்தல் / சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் கையொப்பமிட்ட கடிதம்
- செயலகக் கிளையிலிருந்து பெற்றுக்கொண்ட நீட்டிப்புக்கடிதம்

**For further details call IRD Call Centre on 1944**

www.ird.gov.lk